III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

O.S.125/2017 and OS.No.355/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 05-06-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :M.Yakesh Krishnan | Caste | : |
| Father's Name | :Marimuthu | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk: | |

**முதலாம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மாதேஷ் குமார், ஆனந்த் குமார், ரம்யா, சரோஜா மற்றும் குபேந்திரன் ஆகியோரின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் மற்றும் செட்டில்மென்ட் பத்திரம் ஆகியவற்றின் புல எண்கள் 515/3பி மற்றும் 516/1பி1சி ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. நான் அசல் வழக்கு எண்.125/2017-ஐ புல எண்.515/3பி மற்றும் 515/4பி ஆகியவற்றிற்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரிதான். எனது வழக்கில் உள்ள சர்வே எண்களை மாதேஷ் குமார் வகையரா பத்திரங்களில் உள்ள சர்வே எண்களையும் நில அளவரை வைத்து அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. மாதேஷ் குமார், ஆனந்த் குமார் மற்றும் ரம்யா மனை பிரிவுகாள வாங்கியுள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மாதேஷ் குமார் வகையராவின் இடத்தின் சர்வே எண்களும் எனது இடத்தின் சர்வே எண்களும் அதன் பரப்பளவும் வெவ்வேறானது என்றும் ஆதலால் எனது வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் வழங்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 1974 வருடத்திய கூர் சீட்டின் அசல் ஆவணம் ஏழுமலை மனைவி சரோஜா மற்றும் சுசிலா ஆகியோரிடம் உள்ளது. புல எண் 515/4பி கூர் சீட்டில் உள்ளது. புல எண் 515/3பி கூர் சீட்டில் இல்லை, அது எனது தாத்தா வாங்கியது. கூர் சீட்டின் அசல் ஏழுமலை மனைவி சரோஜா மற்றும் சுசிலாவிடம் உள்ளது எப்படி எனக்கு தெரியும் என்றால் எனது தகப்பனார் சொல்லியுள்ளார். எனது

வழக்கின் தாவா சொத்திற்கான அசல் ஆவணங்கள் வெவ்வேறு நபர்களிடம் உள்ளது ஆதலால் எனக்கு நான் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.125/2017ன் சொத்துக்களுக்கு கம்பியூட்டர் பட்டா உள்ளதா என்றால் இல்லை. எனது வழக்கின் தாவா சொத்துக்களுக்கு உரிய கம்பியூட்டர் பட்டா மாதேஷ் குமார், ஆனந்த் குமார் மற்றும் ரம்யா ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.125/2017 பொய்யான வழக்கு என்றும் ஆதலால் அந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதிகள் 2,3,8,9,14,16 மற்றும் 17 தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).